**கவிதைப் போட்டி -10**

**நாளை தலைமுறையின் இன்றைய கனவு (21)**

இலைகள் உதிர்வதால் மரங்கள் வாடுவது இல்லை
மீண்டும் புதிய இலைகளை தோற்றுவிக்கும்
வருங்கால வாழ்வை காண இருக்கும்
நாளைய தலைமுறையே!

இன்றைய தலைமுறையை கண்டு வாடாதே!
புதிய இலக்கை நோக்கி பயணம் செய்ய....
முன்னோரின் முன்னுரையை
பாடமாய் கொண்டு!
சாய்ந்திடும் சமுதாயம்
நிமிர்ந்து நடந்திட
வீழ்ந்திடும் தலைமுறை
விரைவில் விழித்திட

நாளைய தலைமுறை!
வேற்றுமை வீண்சண்டை
வேறிகொண்ட அதிகாரம்
வீணர் வாய் பேச்சு பொய்
‘களை’ பொசுக்கி
நன்மை வளர்க்கும் நலம்
வளம் பெறும் வல்லரசாகும்!
சிந்தும் மழை தூறலில் சேர்ந்து
நனைந்து நினைவில்லான
வளமை விவசாயம் காக்கும்!

நிலவை அழகாக்க இருளைப்

ருசிக்கொண்ட ‘இரவு’ போல……

உலகை அழகாக்க மனிதர்களின்

மனதை ஒருங்கினைக்கும்!

வேற்றுமை பாராது ஒற்றுமையாகும்

எங்கள் (நாளைய) தலைமுறை

விஞ்ஞான உலகில்..

விண்ணையே பார்த்து

கற்பனை உலகில்

கனவில் மிதக்காமல்

மண்ணில் வாழ்ந்து

சாதனை புரிந்து!

இலட்சியத்தை அடைய

புல அலட்சியங்களை கடந்து

பாதங்களை பதிய வைத்து

புதிய பாதையை உருவாக்கி

கனவுகளை மேன்படுத்தி

சிகரங்கள் தொட்டு

நாளைய உலகின் வெளிச்சம் காட்டும்

வெள்ளியாய் நிற்கும்

நாளைய தலைமுறையின் கனவுகள்….

சோகங்கள் மறைந்து

புன்னகையில் முகம் மலரும்.

***************